ஆகியவை முறைப்படி அளிக்கப்படுகிறது. இதர ஒன்றிய அலுவலர்களுக்கு இருக்கிற சலுகைகள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. யாருக்காவது வழங்கப்படாத சூழ்நிலை ஏற்படுமேயானால், அவர்கள் விண்ணப்பம் கொடுப்பார்களேயானால், அது கவனிக்கப்பட்டு, வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

Underground Railway in Madras City

*49. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that there was a discussion during July 1972 between National Planning Commission and Officials of the Tamil Nadu Government on the construction of underground Railway in Madras City; and

(*b*) if so, the details thereof?

சென்னை மாநகருக்கு பாதாள ரயில்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பாதாள ரயில் அமைப்பது குறித்து தேசிய திட்ட ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும், தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கும் இடையே 1972 ஜூலையில் விவாதம் நடைபெற்றது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துக் குழு 27—7—1972-ல் மாநில ஆய்வுப் பிரிவைச் சந்தித்து விரிவான போக்குவரத்து ஆய்வுகளைச் செய்வதில் மாநில ஆய்வுப்பிரிவு எய்தியுள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்த்தது.

1973 பிப்ரவரி 7]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவர்களுடைய பேச்சு வார்த்தையின் காரணமாக இந்தப் பாதாள ரயில் அமைக்கும் திட்டம் எப்போது வரப்போகிறது என்பதையும், மாநில அரசு அதற்கு எவ்வளவு செலவு செய்யும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருக்கிறது. இந்தப் பாதாள ரயில் அமைப்பதுபற்றி சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்தையொட்டி மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதை அமைக்க முடியுமா, முடியாதா என்ற அடிப்படையிலே ஒரு சந்தேகத்தை எழுப்பி வருகிறார்கள். அதற்கான நியாயத்தையும், அவசியத்தையும் தமிழக அரசின் சார்பாக சொல்லியிருக்கிறோம். ஆனால் வேறு புள்ளி விவரத்தை ரயில்வே இலாகாவைச் சேர்ந்தவர்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மத்திய அரசினுடைய அமைச்சரவர்கள் விரைவில் தெளிவுபடுத்துவார் என்று நம்புகிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, புதிய பாதாள ரயில் சென்னை நகரத்திலே எவ்வளவு நீளம் போடுவதாக திட்டம் இருக்கிறது என்பதையும், எந்தெந்த ரூட்களில் (வழிகளில்) போடவேண்டுமென்ற திட்டத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னை நகரத்தினுடைய போக்குவரத்து மிகுதியாக உள்ள பகுதிகளென்ற அடிப்படையில், வடக்கு, தெற்கு திசைகளில் ஏறத்தாழ திருவொற்றியூருக்கு அப்பாலேயிருந்து திருவான்மியூர் வரையில் கடற்கரையிலிருந்து ½ மைலுக்குள்ளாக அந்தக்கடல் ஓரப் பகுதி வழியாக அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் மிகத் தெளிவாக வலியுறுத்தப்பட்டு வருகிற பாதாள ரயில் திட்டம். ஏறத்தாழ 25 மீட்டர் அல்லது 20 மைல் தூரம் அந்தப் பாதை அமைய வேண்டி வரும். 4–10 பி.ப.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அதற்கு என்ன விதமான ஆட்சேபணை கிளம்பியிருக்கிறது? ஒருகால் கடற்கரை

நகரமாக இருப்பதனால், பாதாள ரோடு போடுவதில் கஷ்டம் இருக்கிறதா? கல்கத்தாவில்கூட பாதாள ரயில் போடுவதற்கு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே நமது சென்னை நகரத்திற்கு, தலைநகரத்திற்கு பாதாள ரோடு போடுவதற்குத் தடை இருப்பதற்குக் காரணமில்லை. எந்த விதமான ஆட்சேபணை இருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சரியான தடை என்று சொல்லத்தக்க தடை எதுவும் எழுப்பப்படவில்லை. ஐயம் என்ற அடிப்படையிலே தான் அந்தத் தடைகளை அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதைப் பரிசீலிப்பார்களேயானால், ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

திரு. சா. கணேசன்: நம்முடைய மாநில அரசு தயாரித்திருக்கிற திட்டத்திற்கும் புள்ளி விவரத்திற்கும் மத்திய அரசு கணித்திருக்கிற திட்டத்திற்கும் உள்ள தொகையிலே பெரிய அளவு வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக தடைப்பட்டிருக்கிறதா? அல்லது நமது மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களுடைய விருப்பு வெறுப்பு காரணமாக, செய்யும் தலையீடு, சில இடையூறுகள் என்ற பரவலான ஒரு புகார் இருக்கிறதே அதன் காரணமாக, இந்தப் பணி தடைப்பட்டு நிற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழக அரசின் சார்பாக போக்குவரத்து நெருக்கடி மிகுதியாக உண்டாகிற பகுதியினுடைய புள்ளிவிவரம் எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் ரெயில்வே அமைச்சகத்தின் சார்பாக, தனியாகவே புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு என்று அமைப்பு ஏற்படுத்தினார்கள். அந்த அமைப்பிலே உள்ள அலுவலர்கள் இந்தப் புள்ளி விவரத்தைப் போலவே, ஏறத்தாழ அதே விதமாக, விவரம் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் அதிலே உள்ள அதிகாரி ஒருவர் மிகுதியாகப் போக்குவரத்து உள்ள நேரத்திலுள்ள எண்ணிக்கை விவரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது, குறைவாக இருக்கிற நேரத்திலே உள்ள எண்ணிக்கை விவரத்தைதான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாக நினைக்கிறார். அதனால் அவர் கருத்து மாறுபட்டவராக இருக்கிறார். இதுபற்றி மத்திய அமைச்சருக்கே விவரம் தரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக நியாயம் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறேன்.

1973 பிப்ரவரி 7]

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் செயல் படுவதற்கு விசேஷமாக ஏதாவது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எவ்வளவு செலவழிக்கும் என்று அரசு கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போடுவாரானால், எல்லா விவரத்தையும் சேகரித்துத் தர நான் முயற்சி எடுத்துக் கொள்வேன்.

Deputy Commissioner of Labour, Mylapore

* 51. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that no Deputy Commissioner of Labour has been posted to the Labour Office at Mylapore, Madras from February 1972 onwards;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken or proposed to be taken to fill the post?

தொழிலாளர் நல துணை ஆணையாளர், மயிலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மயிலாப்பூரில் உள்ள தொழிலாளர் நல அலுவலகத்தில் 1972 பிப்ரவரியிலிருந்து தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் எவரும் நியமிக்கப் படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அந்தப் பதவியை நிரப்ப எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) சென்னையில் தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளராகப் பணியாற்றிய திரு. சி. ஆர். விஸ்வநாதன் தொடக்கத்தில் 21—2—1972 முதல் ஒரு மாத காலத்துக்கு மட்டுமாகக் குறுகிய காலத்துக்கு மருத்துவ விடுப்பில் சென்றார். தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடைய தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர்களின்